பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**04 01 2026** **7 15**

ஞாயிற்றுக்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தமிழகத்தில் திமுகவின் குடும்ப அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய நேரம் வந்துவிட்டதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

2. வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் அரசுமுறைப் பயணமாக இன்று பிரான்ஸ் புறப்பட்டுச் சென்றார்.

3. தொழிலாளர் நலனுக்கான 4 புதிய சட்டங்கள் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவிடும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. நைஜீரியாவில் நடைபெற்ற துப்பாக்கிச்சூடு சம்பவத்தில் **30** பேர் உயிரிழந்தனர்.

5. வதோதரா சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Divija Paul** பட்டம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

தமிழகத்தில் திமுகவின் குடும்ப அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய நேரம் வந்துவிட்டதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

புதுக்கோட்டையில் நடைபெற்ற பிஜேபியின் மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் மேற்கொண்ட யாத்திரையின் நிறைவு விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

திரு. உதயநிதி ஸ்டாலினை முதலமைச்சர் பதவியில் அமர வைக்க வேண்டும் என்ற கனவு நனவாகாது என்றும் அவர் தெரிவித்தார்.

திமுக அரசு அனைத்து துறைகளிலும் தோல்வி கண்டுள்ளதாக அவர் குற்றம் சாட்டினார்.

நாட்டில் வேறெங்கும் இல்லாத அளவிற்கு திமுக அரசு ஊழல் புரிந்துள்ளதாகவும் அவர் குறை கூறினார்.

சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாகவும், போதைப்பொருள் புழக்கம் அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பிஜேபி - அஇஅதிமுக இடையேயான கூட்டணி இயற்கையானது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி மிக்பெரிய அளவில் வெற்றி பெறும் என்றும் திரு. அமித் ஷா நம்பிக்கை தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய திரு. நயினார் நாகேந்திரன், மதுரையில் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 12ஆம் தேதி தொடங்கிய இந்தப் பிரச்சாரப் பயணம் புதுக்கோட்டையில் இன்று நிறைவடைவதாக குறிப்பிட்டார்.

இந்த யாத்திரையின்போது ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பொதுமக்களை தாம் சந்தித்ததாக அவர் கூறினார்.

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டும் என்பதே அவர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி மிகப்பெரிய வெற்றியைப் பெறும் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<>>>>

வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் அரசுமுறைப் பயணமாக இன்று பிரான்ஸ் புறப்பட்டுச் சென்றார்.

இந்தப் பயணத்தின்போது பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் திரு. **Jen Noel Barrot** உடன் அவர் பேச்சு நடத்துகிறார்.

இரு நாடுகளுக்கிடையேயான உறவை மேலும் வலுப்படுத்துவதற்கான அம்சங்கள் இந்தப் பேச்சுகளில் இடம்பெறும் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதனைத் தொடர்ந்து **Luxembourg** செல்லும் திரு. ஜெய்சங்கர், அந்நாட்டுத் தலைவர்களுடன் ஆலோசனை நடத்துகிறார்.

<<<<>>>>

தொழிலாளர் நலனுக்கான **4** புதிய சட்டங்கள் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவும் என்று மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

மேற்குவங்க மாநிலத்தில் தேயிலைத் தொழிலாளர்கள் சங்க பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

தொழிலாளர்களுக்கு உரிய ஊதியம் கிடைப்பதை இந்த சட்டங்கள் உறுதி செய்யும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த சட்டத்தின் நன்மைகள் குறித்தும் அமைச்சர் விரிவாக எடுத்துரைத்தார்.

<<<<>>>>

ஆந்திராவின் **Bhogapuram** பசுமை சர்வதேச விமான நிலையத்தில் பரீட்சார்த்த அடிப்படையில் விமானம் இன்று

தரையிறக்கப்பட்டதாக அம்மாநில முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனைப் பதிவு செய்துள்ள அவர், இந்த விமான நிலையத்தில் வரும் ஜூன் மாதம் முதல் விமான சேவை தொடங்கும் என்று தெரிவித்தார்.

இந்த நாள் வரலாற்றுச் சிறப்புமிக்க நாள் என்றும் திரு. சந்திரபாபு நாயுடு அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

ராணுவ தளபதி ஜெனரல் உபேந்திர திவேதி இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக ஐக்கிய அரபு எமிரேட் புறப்பட்டுச் சென்றார்.

இரு நாடுகளுக்கு இடையேயான பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இந்தப் பயணத்தின்போது அவர் விவாதிக்க உள்ளார்.

இதனைத் தொடர்ந்து இலங்கை செல்லும் அவர், அந்நாட்டுத் தலைவர்களுடன் பேச்சு நடத்துகிறார்.

<<<<>>>>

இனி, மத்திய அரசு கடந்த ஆண்டு படைத்த சாதனைகள் குறித்த தொகுப்பு.

(Opening Tune - 20 Sec.)

இதில் இன்று இடம்பெறுகிறது தொலைநோக்கு பார்வையுடன் மேற்கொண்டு வரும் சீர்திருத்த நடவடிக்கைகள் காரணமாக உலகம் போற்றும் ஒப்பற்ற தலைவராக உருவெடுத்துள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடியின் சாதனைகள்...

*(Sound Byte - 190 Sec.)*

<<<<>>>>

குஜராத் மாநிலத்தில் நுகர்வோரின் நலனைப் பாதுகாக்கும் வகையில் தங்க நகைக் கடைகளில் அம்மாநில அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர்.

இதில் முறைகேடுகளில் ஈடுபட்டது தொடர்பாக 253 வழக்குகள் பதிவு செய்யப்பட்டதாக அம்மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதுபோன்ற நடவடிக்கைகள் தொடரும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஐ.நா. பாதுகாப்புக் குழுவின் அவசரக் கூட்டம் நாளை நடைபெறுகிறது.

வெனிசுலாவுக்கு எதிரான அமெரிக்காவின் ராணுவ நடவடிக்கை குறித்து இதில் விவாதிக்கப்பட உள்ளது.

கொலம்பியாவின் கோரிக்கையை ஏற்று இந்தக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கொலம்பியாவின் இந்த கோரிக்கைக்கு சீனா மற்றும் ரஷ்யா ஆதரவு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

கிரீஸ் நாட்டில் தொழில்நுட்ப கோளாறு காரணமாக விமானப் போக்குவரத்து இன்று பாதிக்கப்பட்டது.

விமானப் போக்குவரத்திற்கு உதவிடும் தொழில்நுட்பம் திடீரென செயலிழந்ததால் அனைத்து விமானங்களின் சேவை நிறுத்தப்பட்டதாக அந்நாட்டு அரசு தெரிவிக்கிறது.

<<<<>>>>

நைஜீரியாவில் நடைபெற்ற துப்பாக்கிச்சூடு சம்பவத்தில் 30 பேர் உயிரிழந்தனர்.

அந்நாட்டின் கிராம ம் ஒன்றில் துப்பாக்கியுடன் நுழைந்த நபர் ஒருவர் கண்மூடித்தனமாக நடத்திய தாக்குதலில் இவர்கள் உயிரிழந்ததாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

வதோதரா சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Divija Paul பட்டம் வென்றார்.

13 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர் 9-7, 7-11, 8-11, 11-7, 11-5 என்ற செட் கணக்கில் இந்தியாவின் Harshita Nurani-ஐ வென்றார்.

19 வயதுக்குட்பட்டோருக்கான கலப்பு இரட்டையர் பிரிவில் Abinandh - Ananya இணையும், Arya - Syndrella Doss இணையும் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளன.

**<<<<The End>>>>**